பால்வெண்மை செய்தி

Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் * ஆவணி 1987 * இதழ் - 140

திவ்வியம் பழுத்த சிவானந்தசோதி

இன்றைய சிந்தனையாளர், மெய்யியல் வல்லுநர், கல்விப் பேராசிரியர்கள் 'ஹொலிஸ்டிக் எஞ்சினியரிங்' என்னும் துறையை நன்றாக அலசி ஆராய்ந்து, பழைய முறைக்கே மீண்டும் வந்துள்ளார்கள். பாரம்பரியம் என்பது பிறப்புரிமைப் பொறியாள்கை என இன்று மலர்ந்துள்ளது. மங்கள மேளம் முழக்க வல்லவனின் மைந்தனுக்குத் தட்டிக்காட்டத் தேவையில்லை. அவன் தானே மேசையில் தவில் வாசிக்கக்காணலாம்.

இப்படியாயின் மெய்யியல் வல்ல அப்பைய தீட்சதர் என்னும் மகான்வழி வந்தவர், இளமையில் வைத்தியத்துறையில் ஈடுபட்டு உடம்பு நோய்க்கு மருத்துவஞ் செய்தவர், நாளடைவில், தானே உயிர்நோய்க்கு வைத்தியஞ் செய்யத் தயாரானார் என்றால் வியப்பொன்றுமில்லை.



மலைகளிலுயர்ந்த இமயஞ்சார்ந்த மனிதரில் உயரமான அதி மனிதரான டாக்டர் குப்புச்சாமி அவர்கள் தெலுங்கு தேசம், தமிழ் நாட்டை விட்டுப் பிரியுமுன் தோன்றியவர். மெட்ராஸ் ஆந்திரா பல்கலைக்கழகத்து வைத்தியத் துறையில் சிறப்பாகத் தேறியவர்,

நாடறிந்த மருத்துவராயிருந்தவர், மனிதாபிமானம் மிக்கவர். எல்லோரும் முத்தி பெறுவது நிச்சயம் என்று அறுதியிட்டுக் கூறும் சைவம் அறிந்தவர். பெரிய மகான்களின் அடிச்சுவட்டைக் கண்டவர். பெரியவர்களின் அடிச்சுவட்டை எல்லோரும் பின்தொடரவேண்டும் எனவுள்ளம் கொண்டு நன்நெறியைக் காண்பித்தவர். புனிதமான கங்கைநதி பளிங்குபோலப் பாய்ந்துவரும் ஹரித்துவாரத்துக்கும் அப்பால் மிகப்புனிதமான சூழலிலே உலகமெங்கும் ஒளிகாலும் வண்ணம் ரிஷிகேசம் என்னும் தலத்திலே ஒளிவிளக்கை ஏற்றினர். அந்த ஒளியிலே பற்றவைத்த தீபங்கள் உலகமெங்கும் திவ்விய ஜீவன சங்கங்களாக ஒளிகாலுகின்றன.

★ அன்பு செய்தல் சேவைசெய்தற் பொருட்டேயாம் ★

உ
சிவமயம்

கடவுள் வணக்கம்

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

திருக்கச்சிமேற்றளி

பண் – நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நொந்தா வொண்சுடரே நுனை
யேநி னைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மன
மேபு குந்திருந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான்
மேற்ற ளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனி
ஏத்த மாட்டேனே.

திருச்சிற்றம்பலம்

ஒருபோதும் அழியாத ஒளிபொருந்திய திருவிளக்குப் போன்றவனே, அடியேன் தந்தைக்கும் பெருமானே, திருக்கச்சிமேற்றளியில் எழுந்தருளியுள்ள எந்தந்தையே, தேவரீரையே அடியேன் நினைத்திருப்ப, உள்ளத்திலே புகுந்தருளிய சிந்தனைப் பொருளே, தேவரீர் அடியேன் உள்ளத்தில் புகுந்தபின் நீங்கா துறைந்தருளுகின்றீர், ஆதலால் அடியேன் இனிமேல் தேவரீரையன்றி வேறு யாரையும் புகழமாட்டேன்.

பன்றியைச் சுவைத்த பரம முட்டாள்

முட்டாள் ஒருவன் பன்றி வேட்டையாடச் சென்று பதுங்கியிருந்து வெடிவைத்துப் பிடித்து, அதனை இழுத்துக்கொண்டுபோய் வீட்டில் சேர்த்துவிட்டு, அதனைச் சுட்டுத் தின்பதற்கு விரும்பி, வீட்டுக்கு நெருப்பு வைத்தான். வீடு வெந்து சாம்பலானதால் அவன் கவலைப் படவில்லை. அவனுக்குப் பன்றியிறைச்சி பசிதீரத் தின்ன வேண்டும் என்ற ஆசையே தலைக்கேறி இருந்தது.

திருவள்ளுவர் திருக்குறள்

அவையறிதல்

(கூட்டத்தில் உள்ளவர்களின் நிலையை அறிந்து பேசுதல்)

**" அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர்."**

சொற்களைத் தொகுத்து பேசுவதின் நல்ல பயனை யறிந்த தெளிந்த கல்வியுடையவர்கள், கூட்டத்தின் நிலையை நன்கு தெரிந்து அவர்களின் தரத்துக்கு ஏற்ற வாறு ஆராய்ந்து பேசுதல் வேண்டும்.

The Understanding of Assemblies

Let learned people who can speak well first study the assembly and then address it with discretion.

மண்வாசனை

சாதாரணமாக மண்வாசனையை அறிவதற்கு அங்கே வளரும் தாவரங்களையும் விளையும் பயிர்களையும் எவரும் கருதுவர். எந்தமண்ணில் எந்தப் பழம் நன்றுகவரும், எந்தக்கிழங்கு நன்றுக விளையும், எந்தமரக்கறி நன்றுகச் சுவைக்கும் என்றெல்லாம் கருதுவர்.

மண்வாசனையை வாயால் சுவைக்காமல், செவியால் சுவைப்பதற்கு ஒருசாதனை நாட்டுப்புறப் பாடல்கள், தமிழன் கண்ட கல்வி கலாசாரத்தைத் தக்கபடி நாடோடியாக வெளியிடுவன நாட்டுப்பாடல்கள். நாட்டுப் பாடல்கள் வாய்மொழி இலக்கியங்களாகவே வளர்ந்தவை. அவை சனரஞ்சகமாக வியாபகம் பெற்றவை. இசை பயின்ற நாட்டுப் பாடல்கள் தனிரசமானவை.

இருவர் கண்ட சீதை

ஆதிகாவியமாய இராமாயணத்தை வடமொழியிற் பாடிய வான்மீகி கண்ட சீதையைத் தமிழ் இராமகாதை செய்த கம்பன் சீதாபிராட்டியாராகக் கண்டான். கம்பன் கண்ட சீதையின் பண்பாட்டுக் கோலமும் குணமும் வான்மீகி கண்ட சீதையின் குணங்களில் வேறுனவை, தமிழ் மய மானவை.

அமெரிக்காவில் உள்ள ஹாவார்ட் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சியாளரான திருமதி ஜூலிஹம்பர் ஹீபெர்ட் என்பார், வடமொழியில் சீதையை அறிந்தபின் தமிழ்ச் சீதையை அறிவதற்குத் தமிழ்படித்து இராமகாதை படித்துவருகிறார் என்றால் யாருக்கு விருந்து, யாருக்குப் பெருமை.

★ பொன்னிலும் பார்க்க பொழுது மிகவும் பெரியது ★

ரிஷிகேசத்து இரண்டாம் பட்டம்

இமயஜோதி சிவானந்த சரஸ்வதி அவர்கள் மகா சமாதி அடைந்த பின்னர், அவரிடம் நெருங்கிப் பழகி, ஆச்சிரம சேவையில் அணுக்கத் தொண்டராயிருந்த, சேவையேயுருவான மகான் சித்தானந்த மகரிஷி பீட மேறினர்.

பாரம்பரியமாகப் பார்த்த நாட்டுக்குக் கிடைத்த பக்தி, ஞான யோக முறைகளையே, சிவானந்த குரு கட்டிக்காத்து எமக்கு விட்டுச்சென்றார் என்றும், நாம் அந்த அருஞ்செல்வத்தைப் பேணிக்காத்துப் பயன்படுத்தி, எம் பின்வருபவருக்கு உருக்குலையாமல் விட்டுச்செல்ல வேண்டும் என்றும் கூறுவர். இவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து எம்மையெல்லாம் கண்குளிரக் கண்டு வாழ்த்தி, எம்மைத் தம் ஆச்சிரமத்திற்குக் கட்டாயமாக வருமாறு கட்டளையிட்டவர். நாங்கள் ஐவர் அவர் கட்டளையின் வண்ணம் சென்று, கங்கையில் நீராடி, விசுவநாதரையும் விசாலாட்சித் தாயாரையும், காலபைரவரின் ஆனந்த கோலாகலத்தையும் அருள் மூர்த்தங்களின் திருவருளையும் பெற்று, ஆனந்த மயமான ஹரத்துவாரத்தில் மூழ்கி எழுந்து ரிஷிகேசம் சென்று அரிதினும் அரிய பேறு பெற்றுற போலப் புனிதராளேம்.

சுவாமி சித்தானந்தர் சிவானந்தாச்சிரமத்தில் தங்குதல் குறைவு. அவரை உலகத்தார் விட்டுவைப்பதில்லை. இங்கே ஒருமுறை வாருங்கள் என்று உலக ஆச்சிரமங்கள் அவரை அழைத்துப்போகின்றன. ஆற்றோட்டம் போல ஆங்கிலம் பேசவல்லவர். எல்லாக் கலைகளையும் அறிந்தவர். எதுவுமே தேவையில்லாதவர். மாற்று உடுப்பு ஒன்றுடன் உலகமெல்லாம் பறந்து திரியும் பெரிய துறவி அவர். இன்றைய நவநாகரிக சின்னம் எதுவுமே அவரிடம் கிடையாது. காவியுடையும் தூய மனமும், மகிழ்ந்த முகமும் இனிய மொழியுமே அவர் இன்னும் துறக்காமல் கொண்டுதிரியும் பண்டங்கள். சிவானந்தாச்சிரமத்துக்கு வருபவர்கள் உள்ளந்திருந்தி உத்தமர்களாய் வெளியேறுவதையே அவர் எதிர்பார்க்கிறார். பொன்னைப் பொருளை அவர் பேசுவதும் இல்லை, பொருட்படுத்துவதும் இல்லை.

சுவாமி சித்தானந்தர் ஒரு பரமயோகி. அவருடன் உரையாடுவதே தனி இன்பம். ஒருவர் தொண்டு செய்வதிலே இன்பங்காணலாம் என்பவர். தோட்டி வேலையாயினும் ஒருவர் செய்யத் தயாராயிருத்தல் வேண்டும் என்று சாதனையிலும் காட்டியவர். செல்வம் என்பது பலருக்கும் மகிழ்ச்சி கொடுப்பதால்தான் அது செல்வமாகும். அது மகிழ்ச்சிக்கு வழியேயல்லது சிந்தையின் நிறைவான செல்வம் அன்று. நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எல்லோருக்கும் மகிழ்ச்சி பயப்பதாயிருத்தல் வேண்டும். இத்தகைய மகிழ்ச்சிவெள்ளம் போலப் பரவுதல் வேண்டும். மனமுடைந்து, விரக்தியடைந்து வாழ்பவர்கள் மகிழ்ச்சியடைந்து சிரித்து மகிழ நாம் ஏதாவது செய்வதே மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையும் அமைந்த செயலாகும்.

இன்று அவாவும் பேராசையும் திருப்தியின்மையும் மக்களைப்பற்றி ஆட்ட, மக்கள் விரக்தியடைகிறார்கள். ஆசை அறுமின், ஆசையறுமின் என்று ஞானிகள் சொன்ன வாசகத்தை நம்மவர் அடியோடு மறந்து விடுகிறார்கள். எளியவாழ்வில் இன்பம் உண்டு, புனிதம் உண்டு, பூரிப்பு உண்டு என்பதை உணர்தல் வேண்டும். நாமே செல்வச்சிறப்பிலும் எளிய வாழ்வு வாழ்ந்து காட்டினால் ஏழைகள் பூரித்து ஆனந்தங்கொள்வார்கள்.

இன்று மேற்குத் தேசத்துக் கோடீஸ்வரர்கள் கூட சிந்தையில் நிறைவு காணமுடியாது, இந்தியாவுக்கு வருகிறார்கள். இருடிகளைக்கண்டு இறும்பூதெய்துகிறார்கள். கால்களை மடித்துக் குந்தியிருந்து மூக்கைப் பிடித்துப் பிராணயாமம் பயிலுகிறார்கள். நாங்களோ பரம்பரையாக நமக்குக் கிடைத்த குலவித்தையை அடியோடு மறந்து கண்டபாவனையில் கொண்டை முடிந்து, அலங்கோல ஆடையணிந்து அநாகரிகத்தைத் தழுவுகின்றோம்.

எம்மவருக்கு சித்தானந்த மகான் நல்ல போதனைகள் போதிக்கிறார். மேற்குத் தேசத்தவர் இன்று எளிய வாழ்வை விரும்புகிறார்கள். உள்ளது போதும் என்று உணருகிறார்கள். உற்றார் அயலவர் ஊரவரை நேசிக்கிறார்கள். தொண்டு செய்து தூய்மையைக் கடைப்பிடிக்கிறார்கள். தன்னடக்கம் மேலான தகுதியைத் தரும் என்று உறுதியாகநம்பி அடங்கிவாழ்கின்றார்கள். தன்னடக்கத்தால் புலன்கள் அடங்கும். புலனடக்கமே செல்வமும் இன்பமும் என்று கருதி யோகம் பயிலுகிறார்கள்.



சுவாமி சிவானந்தரின் சீடரொருவர் சச்சிதானந்தர். அவர் பெரிய பொறியியல் நிபுணர். தபோவனம் அமைத்து அமெரிக்கரை அரவணைத்து ஞானச் செங்கோல் செலுத்துகிறார். பித்தளைச் செங்கோல், வெள்ளிச் செங்கோல், பொற்செங்கோல் எதற்குமே கட்டுப்படாத மக்கள் ஞானச் செங்கோலுக்கு முன்மண்டியிட்டு வணங்குகின்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

ரிஷிகேசத்து.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள். ஞானதானத்தைக் கைகுவித்து செவிமடித்துக் கேட்டுச் சிந்தையில் நிரப்புகிறார்கள். தங்கள் பிள்ளைப் பெயர்களை விடுத்துத் தீட்சாநாமம் போல இந்திய பெயர் களை இட்டுக் கொள்ளுகிறார்கள். சத்தியன், சுதன், குகன், நிரஞ்சன், வேலன், முருகன் என்று ஆண்கள் வழங்க; பெண்கள் சீதை, லீலா, சுபோதினி, கமலா, விமலா என்றெல்லாம் வழங்குகின்றார்கள். இந்த முறை யில் இன்னும் ஆயிரக்கணக்கான அமெரிக்கர் ஆதரவு காட்டுகிறார்கள். அங்குள்ள வேறுசமயத்தவர் எவ்வித ஆர்ப்பாட்டமோ, எதிர்ப்போ காட்டுவதில்லை.

எங்கள் நாட்டவரைப் பொறுத்தமட்டில் நம்மவருள் பலர் தங்கள் அடிப்படைத் தேவைகளே இல்லாமல் வருந்துகிறார்கள். அடிப்படைத் தேவைகளைப் பெறுவ தற்கு மதம்மாறும் வேலையில் பயனில்லை. அவர்களுக்கு உழைப்புக்கு வழிவேண்டும். வேலைவாய்ப்புக் கிடைத்தல் வேண்டும்.

சுவர்க்கவாசல்

உத்தரப்பிரதேசம் ஞானிகள் இருப்பிடமாய் வடக்கில் அமைந்ததாகும். அங்கேதான் பத்திரிநாத், கேதாரநாத், கங்கோத்திரி, யமுனோத்ரி முதலாய புண்ணிய தலங்கள் உள்ளன. ஹரத்துவாரம் இன்று ஹரித்துவாரம் என்றே வழங்குகிறது. கும்பமேளா என்னும் பெருந் தீர்த்த விழாவில் கோடிக்கணக்கானோர் தீர்த்தமாடும் பரந்த பெருவெளிப் புனிதகங்கை பளிங்குபோல விரைவாகப் பாயும் பகுதி அது. அங்கேதான் தமிழ் நாகரிகம் பழுத் துக் கனிந்துள்ளது. அதுதான் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் (நாட்கோட்) கொடைவளம் குவிந்துள் ளது. பல்லாயிரவர் தங்கிப்போக மண்டப வசதியும், ஆற்றில் அச்சமில்லாமல் நீராடவசதியும் அவர்கள் செய் துள்ளார்கள்.

அப்பால் அமைந்த ஆச்சிரமங்கள் வரிசையில் ரிஷி கேசம் என்னும் சிவானந்தநகரம் ஒன்று; கொட்டிலில் ஆரம்பித்து இன்று நகரமாக விரிந்து மலர்ந்த இடம் சிவானந்த புனித பூமி.

சுந்தரமூர்த்தி நாயனார்

அந்தணர் வீட்டில் தோன்றி, மன்னவர் மாளி கையில் வாழ்ந்து, இருவகைத் திருவும் பொலியச் சுந்தர புருடனுய்த் திருமணக் கோலத்தில் இருந்த போதே, இறைவன் முதிர்ந்தகோலத்தில் எளிவந்து நீ

என்னுடைய மீளா அடிமை என அழைத் துச் சென்று, அருகில் திருக்கோயிலில் மறைந் தருள, சுந்தரர் தேவாரம் பாடியருளினர். தமக்கு முன்னிருந்த அறுபது நாயன்மாரின் பட்டியலைத்தந்து தாம் அவர்க்கு அடிமை எனக் கூறிப் பெரும்தொண்டராய், தொண் டர்க்குத் தொண்டராய்த் திருப்பணி வேலை கள் செய்யத்தொடங்கினர். அவர் பாடி யருளிய அற்புதப் பாடல்களுள் ஆயிரம் வரையில் எமக்கு ஏழாந்திருமுறையாகக் கிடைத்துள் ளன. அவர் சொன்ன அறுபது பெரியவர்கள் உட்பட அவரும், அவரின் தாய், தந்தையரும் சேரச் சைவநாயன் மார் அறுபத்துமூவர் எமக்குப் பெரியவராயினர்கள். அவர் சொன்ன திருத்தொண்டத் தொகையை விரித்து நம்பியாண்டார்நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருள, இவற்றை ஆதாரமாகக் கொண்டு சோழப் பேரரசன் குலோத்துங்கனின் முதன் மந்திரியார் அருள் மொழித் தேவன் என்னும் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும், மாக்கதை என்றும் வழங்கும் பெரிய புராணம் தந்தருளினர். தமிழ்வளர்ந்தது, சைவம் பரவித் தழைத்தது. தென்கிழக்காசிய நாடுகள் எங்கும் சைவம் மணத்தது.

தோற்றம்

நானூறுண்டுகளுக்கு மூன் தெலுங்கு தேசத்தில் அப்பையதீட்சிதர் என்பார் வாழ்ந்து அளப்பரிய சிவப் பணி புரிந்தவர். அரிய நூல்கள் எழுதியும், அரிய முறை யில் பேசியும் சமயம் வளர்த்தவர். நல்ல சீடர்களை உரு வாக்கிச் சிவப்பணிபுரிய வைத்தவர்.

அந்த மகானின் பரம்பரையில் வந்து நூறுண்டு களுக்குமுன் வாழ்ந்த வெங்கு ஐயர் என்னும் பெரியார், பார்வதி அம்மாள் என்பாரை மணந்து தாம்பிரபரணி நதியோரத்தில் இல்லறம் நடத்தி நல்லறம் செய்து வந்த வேளையில் 8-8-1887 ஆம் நாளில் பரணி நட்சத்திரம் உச்சம் கொடுத்த வேளையில் பட்டமடை என்னும் ஊர் மகிழப்பாலசூரியன் போன்ற ஆண்குழந்தை தோன்றியது. அதற்குக் குப்புசுவாமி எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

இளமை

இளமையிலேயே நல்ல தோற்றப்பொலிவோடு நன் முக ஓடியாடி விளையாடி ஊக்கத்தோடு தல்விகற்ற குப்பு சுவாமி தஞ்சாவூரில் வைத்தியக்கல்லூரியில் கற்று நல்ல வைத்தியனுய் உருவாகிய வேளையிலேயே திருவருட் கடாட்சம் பெற்று "அமிர்தம்" என்னும் சஞ்சிகையை ஆங்கிலத்தில் வெளியிட்டுப் பெரும்புகழ் பெற்றார். பெய ருக்கேற்ற முறையில் அந்தச் சஞ்சிகையில் ஞானவான் களின் உபதேசங்களை நிறைய வெளியிட்டு வந்தார். பாரம்பரியத்தை நெறிப்படுத்தும் "ஜெனரிக் எஞ்ஜினி யரிங்" என்னும் பிறப்புரிமை நெறியாள்கை வேலை செய் யும் என்பத இவரின் சிந்தனையில் தெரிந்தது. அஃது என்னவென்றால், அப்பையதீட்சிதரின் வித்தையை இவர் அதிகம் கல்லாமலே அறியக்கூடியவராய் அது வந்து வாய்த்தது என்பதாகும்.

டாக்டர் குப்புசுவாமி

பெரும்புகழ் பெற்ற டாக்டர் குப்புசுவாமி கோலா லம்பூரில் வேலைதேடிச் சென்றதும், பெரிய வெள்ளைக்கார அதிகாரி இவரைப்பார்த்து "நீர் ஒரு வைத்தியசாலையைத் தனிமையில் நடத்துவீரா?" என்று கேட்டார். "ஒன் றல்ல மூன்று வைத்தியசாலைகளை ஒரேவேளையில் தனிமை யாய் நடத்துவேன்" என்று துணிவோடு இவர் பதில் கூறினர். இவரின் தோற்றத்தையும் உள்வேகத்தையும்

(5ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர் குப்பு.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளையன் அறிந்து வியந்தான். பரணியில் பிறந்தவன் தரணியை ஆள்வான் என்பதை வெள்ளையர் அறிவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. டாக்டர் குப்புசுவாமி வெறும் வைத்தியனே மருத்துவனே அல்ல. அவர் மனிதாபிமானி. சோம்பலை அறியாத உத்தமர். உழைப்பாளி உலகம் வாழவேண்டும் என்னும் உள்வேகம் தூண்ட நல்லதையே செய்யத்தோன்றிய நாகரிக மனிதன்.

இவருடைய பெரும்தன்மையைக் கண்ட சகபாடிகளான டாக்டர்கள் தங்கள் வேலையில் தவறினால் இவர் புன்முறுவலோடு அவர்களின் பணியையும் செய்துவிடுவார். ''எங்களுக்கு என்னடி பெண்டுகளே எங்கள் சங்கரி அண்ணன் இருக்கையிலே'' என்பது பரோபகார சிந்தனை உள்ள சங்கரனைக் குறிக்கும் நாடோடி வாக்கியம். சங்கரன் நன்மையைச் செய்பவன் என்பது திருவருட்பயன் கூறும் சைவசித்தாந்தம்.

உடற்பிணி மருத்துவர் உயிர்ப்பிணி மருத்துவரானார்

குப்புசுவாமி குவலயம் உய்யவந்தவர். குருதேவராவதற்குரிய குறிகள் அவரிடம் காணப்பெற்றன. முன்னர் விசிட்டாத்துவைதம் தந்தருளிய இராமானுஜர் போல இவரும் தீண்டாமையைப் போக்க அரும்பணி புரிந்தவர், அநுட்டானத்தில் செய்து காட்டியவர். தங்கள் வளவில் வேலியடைத்த ஒரு தொழிலாளியின் கைவண்ணத்தைக் கண்டு வியந்து, அந்த அழகுக்கலையை அவனிடம் பழகுவதற்குச் சென்று, பின்னின்று பழகியவர். இவரிடம் சீடருக்குரிய பாவனை தோன்றங்கண்ட அந்தத் தொழிலாளி அஞ்சி ஒதுங்கி, ''ஐயா! தாங்கள் பிராமண குலத்தவர் நான் தாழ்த்தப்பட்டவன் தாங்கள் இவ்வாறு ஒழுகினால் ஊரவர் என்னைத் தண்டிப்பர்'' என்று நயமாகக் கூறினான்.

சில நாள்களில் இவர்கண்ட காட்சி நனவுமல்ல கனவுமல்ல அது ஒருவகைக் காட்சி. அது மனோதத்துவ நிபுணர்கள் கூறும் இல்பொருட்காட்சியுமல்ல, திரிபுக் காட்சியுமல்ல! இவர்கண்ட காட்சி மேலோர் ஞானிகள், ரிஷிகள் காணும் ஒரு புனித காட்சி. இத்தகைய காட்சிகளைக் கண்டவர்களே திருஷ்டாக்கள். திருஷ்டாக்கள் தந்த மெய்ஞ்ஞானமே தரிசனங்கள்.

குப்புசுவாமி கண்ட காட்சிதான் யாதோவெனில், அஃது அந்தரங்கமானது. தந்தையார் பூசையறையில் வைத்து வணங்கியபடத்துக்குப் பூப்பறித்துக் கொடுத்து வந்த குப்புசுவாமி, இறைவன் வேலியடைத்த தொழிலாளியிடம் இருப்பதைக் கண்டார். அந்தக்காட்சியில் தம்மை மறந்த அவர் அடுத்தநாள் புதியவேட்டி சால்வை, மலர்மாலை, சந்தனம், திருநீறு எல்லாம் கொண்டு சென்று தொழிலாளியை அலங்கரித்து, அட்டாங்கமாக வீழ்ந்து வணங்கி ஒதுங்கிநின்றார். உலகம் ஆச்சரியப்பட்டது.

தாம்கண்ட காட்சி கனவுக்காட்சியல்ல, அது தத்துவக்காட்சி என்று அவரே தம் வரலாற்று விளக்கத்தில் கூறுகின்றார். இவையாவும் இளமையில் தாமிரபரணி ஆற்றோரத்து நிகழ்ந்த பழைய சங்கதிகளாகும்.

இப்பால் கோலாலம்பூரில் கொழுத்த சம்பளத்தையும் எல்லோரும் தலைவணங்கும் தொழிலையும் உதறிவிட்டுப் போகச்சொன்ன ஒரு காட்சி அவரை இமயமலைச் சாரல்நோக்கி இழுத்தது.

காட்சிவழியே இழுபட்ட குப்புசுவாமி தெலுங்கு தேசம் மீண்டு, உத்தரப்பிரதேசமாதியன கடந்து, கங்கைப்பிரதேசம் நண்ணினார். உண்மையை நாடிநடந்தார். கங்கையில் நீராடினார். ஆண்டது 1924 ஆனது. பரமஹம்சர் விஸ்வானந்த சரஸ்வதி என்னும் திருநாமந் தாங்கிய குருவைக் கண்டார். காலடியில் வீழ்ந்தார். அக்கினிசான்றாகச் சஞ்சிதவினைசாம்பராயிற்று இவருடைய ஞானதீட்சையின்போது ஹோமம் வளர்த்து அக்கினிகாரியம் செய்தவர் புகழ்பெற்ற சுவாமி விஷ்ணுதேவானந்தர் என்பவராவர். காவியுடுத்து ஆகாமியம் ஏறாமல் பிராத்துவத்தை அநுபவித்தவாறே உலகத்தைத் துறந்து உத்தம சுவாமியாகிச் சிவானந்த சரஸ்வதி என்னும் தீட்சாநாமம் பெற்றார்.

சாதனைபுரியத் தவச்சாலை சேர்ந்தார்

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைபட்டாலும் சித்தம் சிவன்பாலிருத்தல் வேண்டும். சித்தத்தைச் சிவன்பால் வைத்தற்கும் ஒரு சாதனை வேண்டும். சாதனை புரியத் தனியிடம் நாடினார். பல்லாண்டுகள் சுவர்க்காச்சிரமம் என்னும் இடத்தில் வாழ்ந்து பழகியவருக்குத் தனியிடம் தேவையாயிருந்தது.

தனியிடம் தேடிச்சுதந்திரப்பறவை போலப் பாடியோடி மகிழ்ந்து திரிந்தபோது பக்தர்கள் பலர் இவரின் சீடராகிப் பின்தொடர்ந்தார்கள். பக்தர்களுக்கு வழிகாட்டும் முத்தராக இவர் யாத்திரை செய்தார்.

இவ்வாறுகக் கங்கையின் மறுகரையை அடைந்து மாட்டுக்கொட்டிலாயிருந்த ஓரிடத்தை மறையோதும் மடமாக்கினார். ஆகவே 1936 ஆம் ஆண்டில் உலக புகழ் பெற்று வியாபகமுற்ற திவ்விய ஜீவன சங்கத்தைக் கண்டார். கண்டதும் ஒருநாடோ இருநாடோ இல்லை, இல்லை பலநாடுகள் அறிந்து ஆங்காங்கேயிருந்து சீடர்கள் ஓடோடி வந்தார்கள். கடும் சிட்டாசாரங்களிடையே சீடர்கள் பயிற்சிபெற்று, அங்கே ஒளிவீசிய பெருவிளக்கில் தங்கள் ஞானதீபத்தைப் பற்றவைத்துப் பிரியாவிடை பெற்று, இமய ஜோதியின் அருளால் தங்கள் தங்கள் நாடுகளில் திவ்விய ஜீவன சங்கங்கள் அமைத்தார்கள்.

இருடிகேசம் என்னும் ரிஷிகேசத்து ஆச்சிரமம் நாளடைவில் பல திணைக்களங்கள், துறைகள் சார்ந்த படிப்பு வசதி, யோகப்பயிற்சி, நூலாராய்ச்சி, சத்சங்கம், நூல் வெளியீடு, சீடர்களுக்குப் பயிற்சி முகாம், ஐரோப்பியர் அமெரிக்கருக்கு ஒளியூட்டும் மண்டபங்கள், ஏழைகளை அநாதர்களை இரட்சிக்கும் சாலைகள், வைத்தியசாலை இன்ன பிறவும் அங்கே அமையலாயின. அங்குச் சென்று தங்கியவர்கள் பூரணத்துவம் பெற்றுப் புதுமனிதராய், அதிமனிதராய்த் திரும்பினர்.

கடவுளைக் கண்டமை

மாணிக்கவாசக சுவாமிகள் தாம்கடவுளைக் கண்டமையை ''கண்ணுல் யானும் கண்டேன் காண்க, புவனி

(6ஆம் பக்கம் பார்க்க)

★ தேவையற்ற விவாதங்கள் செய்தல் தீமை தரும் ★

கடவுளைக்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் சேவடி தீண்டினுன் காண்க'' என்றெல்லாம் அருளியுள்ளார். சிவானந்த சுவாமிகள் சுவர்க்காச்சிரமத்தில் பயிற்சி பெற்றுத் தேறியிருந்த காலத்தில் சந்நியாசிகள், முனிவர்கள் முதலானேரைப் பலமுறை கண்டுவந்தார். ஒருநாள் அவர் கிருஷ்ணபகவானேயே கண்ணுற் கண்டதாக ''How God came unto my Life'' எழுதியுள்ளார்.

தாம் அன்புவழிகாட்டக் கண்ணப்பநாயனரின் சோபான முறையில் மேலேறிச் சென்ற ஞானயாத்திரையை விளக்கியுள்ளார். ஒவ்வொரு படியிலிருந்தும் பகவானே தம்மை மற்றப் படிக்குத் தூக்கி உயர்த்திவிட்டதாக இறும்பூதெய்தும் வகையில் எழுதியுள்ளார்.

தாம் முன்னர் வேலியடைக்கப்பழகிய தொழிலாளியிடம் கடவுளைக்கண்டதாகவும், பின்னர் கோலாலம்பூரில் வைத்தியனுயிருந்தபோது தம்மிடம் வந்த நோயாளிகளிடம் கடவுளைக் கண்டதாகவும் கூறியுள்ளார். தாம் வைத்தியத்துறையில் அநுபவத்தில் கண்ட ஒளஷதங்களின் பயன்களைத் தம்மைப்போல ஏனைய வைத்தியர்களும் உலகம் முழுவதிலும் அறியவேண்டும் என்றும், எதுவும் எவருக்கும் இந்த உலகில் ஏகபோக உரிமையில்லாதது என்றும் செயலளவில் கண்டதாகவும் கூறுவர்.

மேலான நிலை

சேவையும் தியானமுமே ஒருவரை மேலான நிலைக்கு உயர்த்துவன என்றும், மேலான நிலையில் அது இது என்றில்லாமல் எல்லாம் எங்கும் பரந்த சேசோமயமாக, ஒளிமயமாகத் தோன்றும் என்றும், எல்லாம் பிரம்மமயமாயிருக்கும் என்றும் கூறுவர்.

ஒளிமயமான இறைவனில் உலகம் யாவும் அடங்கும் என்றும், அறியாமையினுல் உண்டாகும் திரிபுக்காட்சிகள், ஒன்று வேருென்ருகப் புலப்படும் தன்மைகள் யாவும் மறைந்துவிடும் என்றும் மனம் என்றென்றும் பரிசுத்தமான ஒளிமயமான ஒன்றையே அறியும் என்றும் கூறுவர்.

இவ்வாருகக் கண்டுவந்த தமக்கு 8-1-1950 ஆம் நாள் சத்தங்கத்தின்போது ஒரு குழப்பநிலையை உண்டாக்கிப் பரீட்சிக்க இறைவனே அரை நிர்வாணக் கோலத்தில் ஓர் ஆண்டியாகவந்து போனதாகவும், தாம் 1951ஆம் ஆண்டில் அகில பாரதயாத்திரை செய்ததாகவும், தாம் விராட் புருஷனைப் பூரணமாகக் காணக் கூடியதாக இருந்தது என்றும், விராட் புருடன் தம்மோடு கீதம் பாடத்தாம் விஸ்வத்துக்கே உரியவரானுர் என்றும் கூறுவர். எல்லாம் பிரம்மமயமாயிற்று. இவ்வாறு அகில இந்திய யாத்திரையின் போது சுவாமிகள் இலங்கைக்கும் வருகைபுரிந்து காட்சிகொடுத்தார்கள்.

Reading other's mind

Of what use are eyes among the organs of the body if they cannot read the mind from the look?

இரட்டைக் கலாநிதி இணையற்ற கலாயோகி

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளை ஆண்ட காலத்திலும், பின்னர் கண்டியைக் கைப்பற்றி இணைத்த காலத்திலும் கெருடாவில் ஊரைச்சேர்ந்த ஆறுமுகத்தாபிள்ளை மைந்தன் குமாரசுவாமி இணையில்லாத மேலதிகாரியாய், பெரியமுதலியாராய், ஆங்கிலத் தேசாதிபதிகளே அரவணைத்துக் கைகுலுக்கும் அந்தஸ்துப் பெற்றவராய் இருந்தார்.

இலங்கைச் சட்டசபை ஆரம்பித்தபோதிலும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் ஒருவரை நியமிப்பதற்கு ஆள் கிடையாமல் கடைசியாக, பெரும் உத்தியோகம் வகித்த குமாரசுவாமி முதலியாரைக் கொழுத்த உபகாரச் சம்பளத்தில் இளைப்பாற்றி நியமித்தார்கள்.

இந்தப் பெரியவரின் புதல்வி செல்லாச்சி சேர் இராமநாதன் அவர்களின் தாய். பெரியவரின் மைந்தன் சேர். முத்துக்குமாரசுவாமி. சேர் முத்துக்குமாரசுவாமி இலங்கையில் முதற்பெரிய உத்தியோகத்தர், முதல் நைற்பட்டதாரி, முதல் பாரிஸ்டர். சில பெறுபேறுகளில் ஆசியா கண்டத்திலேயே முதல்வர்.

சைவாசாரகுணசீலர். இவரை இங்கிலாந்தில் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக்குவதற்கு வெள்ளையர் விரும்பினர். விக்ரோரியா மகாராணியே நேரில் கட்டித்தழுவி என்மகனே எனப் பாராட்டியவர். இதை எல்லாம் நேரில் அறிந்த செல்வி எலிசபெத்கிளேபீபி என்னும் பெருங்குடும்பத்துப்பெண் இவரைக் காதலித்து மணந்துபெற்ற காதன் மைந்தன் யாவர்? காதன் மைந்தன் ஆனந்த கென்ரிஸ் குமாரசுவாமி சரஸ்வதி கடாட்சத்தோடு தோன்றிப் புகழோடு வளர்ந்து செய்தக்க செய்து, செயற்கரிய செய்து உலகத்தையே வாய்பிழந்து அதிசயிக்கச் செய்த மகாவிண்ணன்.

(7ஆம் பக்கம் பார்க்க)

இரட்டைக் ..... (6ஆம் பக்கத் தொடர்ச்சி)



கலை என்றால் ஒருகாலத்தில் மகாகவி தாகூர், மகரிஷி பகவன்தாஸ், மாளவியா, கோகலே, திலகர் முதலான பெரியவர்கள் மெச்சும்படி ஆராய்ந்தவர் ஆனந்தகுமார சுவாமி. இளமையிலேயே புவிசரிதவியல் என்னும் பூலோ கத்தடிப்பாக ஆராய்ச்சியியலில் பெரும் பட்டம் பெற்று, அதற்கேற்ப உத்தியோகமும் பார்த்து, அதனை வேண் டாம் என்று உதறிவிட்டு பொலநறுவைக் காட்டில் உடைந்த செங்கட்டிகளும் உதிர்ந்த ஓட்டுத் துண்டுகளும் கதை பேசக் கேட்டு கலைஎன்றால் என்ன என்று ஆராய்ந்து கூறினார்.

இலங்கையும் இந்தியாவும் அவரை நன்று அறியாக் காலத்தில் அமெரிக்கர் அவரை வாருங்கள் எனக் கம்ப ளம் விரித்து வரவேற்று, "இனி எங்களுக்குக் கலையைப் பற்றிச் சொல்லித்தாருங்கள்" என்று கேட்க, நடராசப் பெருமான் ஆட்டத்தை முன்னிட்டு அவர்களுக்கு 1917 முதல் 1947 வரை பொஸ்டன் நகரத்தில் இருந்து படிப் பித்தார். உலகம் கேட்டுக்கொண்டிருந்தது. அவரைப் பற்றி நீங்கள் அறியுமுன் அவர் உங்கள் பெருமையை உலகத்துக்குச் சொன்னவர்.

அமைதியான சிந்தனைகள்

மரணம் நீடித்த பெருவாழ்வுக்குப் பெருவழி.
அன்பையும் வாசனையையும் மறைக்கமுடியாது.
பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகிறது.
விடிவுக்குமுன் மிகவும் இருட்டாயிருக்கும்.
ஊழ் நல்லவருக்கு வழி காட்டுகிறது.
ஊழ் கெட்டவரை இழுத்துச் செல்கிறது.
அன்பு செய்ய மறுத்தல் கடவுள் இல்லை எனலாகும்.
கொடுத்துக் கெட்டவர் எவரும் இல்லை.
கொடுகொடு பொன்னைக் கொடு, உன்னையும் கொடு.
அன்பைக்கொடு ஆதரவைக் கொடு.
இன்னும் கொடு என்றும் கொடு.
இறைவன் என்னைக் காண்பதற்கு நான் சுன்னுதல் தகும்.
இறைவன் மனித இனத்தில் நம்பிக்கை இழக்கவில்லை.
மரணம் என்பது புதுவாழ்வுக்கு உறுதிமொழி.
அயலவர் பட்டினியாயின் நான் உண்ண நியாயமில்லை.
பழிவாங்குவதற்குப் பெருவழி மன்னித்துவிடுதல்.
மன்னித்துவிடுதல் மிகப்பெரிய தண்டனையாகும்.

1987 ஆகஸ்ற் மாத நிகழ்ச்சிகள்

2	ஞாயிறு	—	சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை பகல் 8-40 அட்டமி தமிழ்வளர்த்த தனிநாயக அடிகள் தோன்றியநாள்
3	திங்கள்	—	அட்டமி நவமி
4	செவ்வாய்	—	நவமி - காலை 6-17 வரை
5	புதன்	—	ஏகாதசி அரவிந்த யோகி ஜனனதினம்
6	வியாழன்	—	ஏகாதசி - ஹஜ்ஜுப் பெருநாள்
7	வெள்ளி	—	பிரதோஷ விரதம் ரவீந்திரநாத் தாகூர் நினைவு
8	சனி	—	பட்டினத்தார் குருபூசை போயாதினம்
9	ஞாயிறு	—	பூரணை விரதம்
11	செவ்வாய்	—	முன்னேஸ்வரம் கொடி
16	ஞாயிறு	—	காரத்திகை விரதம் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தினம்
17	திங்கள்	—	தமிழ் ஆவணிப் பிறப்பு அட்டமி காலை 7-00
18	செவ்வாய்	—	அட்டமி நவமி சுபாஸ் சந்திரபோஸ் நினைவு
20	வியாழன்	—	ஏகாதசிவிரதம்
21	வெள்ளி	—	பிரதோஷ விரதம்
22	சனி	—	கலாயோகி ஆனந்த குமாரசுவாமி தினம்
23	ஞாயிறு	—	ஆயிலியம்
24	திங்கள்	—	அமாவாசை விரதம் தமிழ் தந்த கனகசுந்தரம்பிள்ளை நினைவு
25	செவ்வாய்	—	துர்க்கையம்மன் கொடி
29	சனி	—	பொன்னூஞ்சல் வரதர் கொடி மஞ்சவனப்பதி கொடி
30	ஞாயிறு	—	பிதா ஞானப்பிரகாசர் தினம்
31	திங்கள்	—	மாலை 6-18 அட்டமி தமிழிசை ஆராய்ந்த ஆபிரகாம் பண்டிதர் தினம்

உழைப்புக்கு ஊதியம்

நாம் செய்யும் முயற்சிக்குப் பயன் கிடைக்கிறது. பிறருக்கு அன்பு செய்தால் எமக்கு அன்பு விளைகிறது. அன்பு செய்யும்போது நமது இதயம் அறியச் செய்தல் வேண்டும். பிறருக்குச் சிறுகச் சிறுகச் செய்வன நாளடை வில் நமக்குப் பெருகப் பெருகப் பயனுக வந்து குவியும்; ஆர்க்கும் இடுமின். அவர் இவர் என்று பாராதீர். நல்லனதைக் கொடுத்தால் எல்லாம் நல்லதாகவே வரும்.

— ஹேபேட் பேக்கர்.

Milk White Products are
succe ssful choice everywhere

★ இனிய சொற்கள் வலிய நெஞ்சை உருக வைக்கும் ★

உங்களுக்குத் தெரியுமா?

1. வெனிஸ் நகரத்துப் புகழ்பூத்த ஓவியர்?
2. ஒரு கனஅடி நீரின் நிறை என்ன?
3. எமெற்றிக் Emetic என்பது என்ன?
4. பாற்பற்கள் என்பவை எத்தனை?
5. வெப்பத்தை அளக்கும் கருவியின் பெயர்?
6. செயற்கை வெண்ணெய் எனப் பெயர் பெற்றது?
7. மரமேறும் புலியின் இனம்?
8. தீவுகள் அதிகம் உள்ள சமுத்திரம்?
9. சிலாபம் இதன் பழைய பெயர்?
10. நெப்போலியனின் வீரர்களுள் வீரன்?
11. பொற்சுரங்கமுள்ள தென்ஞபிரிக்க பிரதேசம்?
12. உலகில் மிகநீளமான நதி?
13. சோடியம் குளேறேற், கமத்தில் என்ன பயன் தரும்?
14. காற்றை அளக்கும் கருவியின் பெயர்?
15. ஒரே ஆண்டில் நான்கு தங்கப்பதக்கம் பெற்ற ஒலிம்பிக் வீரப்பெண்?
16. சீனப்பிரதேசத்தின் பெயரில் வழங்கும் துணிவகை?
17. ஒரு ஆட்டத்தில் 16 விக்கற் வீழ்த்தியவர்?
18. றெயில்வேயில் பயன்படும் சக்திகள்?
19. தென் அமெரிக்காவின் தென்முனை?
20. வேல்ஸ் பிரதேச மந்திரவித்தைக்காரன் எனப்பட்டவர்?

விடைகள்

1. காணலெட்டோ 2. அறுபத்திரண்டரை முத்தல் 3. வாந்தி எடுக்கச் செய்யும் மருந்து 4. இருபது 5. கலோரி மீற்றர் 6. மார்கறைன் 7. ஒல்கொட் 8. பசுபிக் 9. சிலாவத்த 10. மார்ஷல்நே 11. யோகனிஸ்பேர்க் 12. மிசூறிமிசிசிப்பி 13. கனேக்கொல்லி 14. அனிமோ மீற்றர் 15. பிளாங்கேஸ் கோண் (1948) 16. ஷான்ரங் 17. ஜிம்லேக்கர் 18. நீராவி, டீசல், மின்சாரம் 19. ஹோன்முனை 20 டேவிட்லொயிட் ஜோர்ச்

சிந்தனைப் பாரம்பரியம்

பதினெட்டாம் நூற்றாண்டில் பிறான்ஸ் நாட்டின் சமூக அமைப்பு குருமார், பிரபுக்கள், பொதுமக்கள் என்னும் முத்திறப் பிரிவுகளைக் கொண்டதாய் நிலவியது. குருமாரும் பிரபுக்களும் சோம்பேறிக் கூட்டத்தவராய் உண்டு றங்க, பொதுமக்கள் உழைக்கும் கரங்களாய் உணவூட்டும் கரங்களாய், ஏவல் செய்யும் கரங்களாய் வாழ்ந்தார்கள். நாட்டின் அரசோலக்கத்தில் எட்டுணை அதிகாரமுமின்றி இருந்தவர்கள் ஏதாவது உரிமை தருமாறு கேட்டபோது அடக்கியொடுக்கப்படத் தலை நிமிர்ந்தனர். அவர்களுக்குச் சிந்தனை வலுவூட்டிய செம்மல்கள் ரூபேஸ்பியரும், வொல்ரயரும் ஆவர். சமுதாய ஊழல்கள் சிதறிப்போக, அரசனையே அடிபணியவைத்து, அவனையும் அடக்காப்பிடாரியாய அலங்கார இராணியையும் கூட்டாக யமனுலகத்துக்கு மக்கள் அனுப்பினர்கள். இத்தகைய சிந்தனைகள் பிறான்ஸ் நாட்டுக்கு மாத்திரமல்ல இங்கிலாந்திலும் இச்சிந்தனைகள் உரிமை கோரத் தூண்டின. உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தன. றூசோவும், வொல்ரயரும் 1778 ஆம் ஆண்டில் புகழுடம்பு பெற்றனர்.

பேராசிரியர் கலாநிதி சேர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்

அவர் இன்றிருந்தால் அவருக்குத் நூற்றிரு வயதாகும். அவர் 1888 இல் திருத்தணி என்னும் நகரில் தோன்றி, சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் பட்டம் பெற்று 1916 ஆம் ஆண்டில் சென்னை இராசதானிக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராயமர்ந்தவர். அக்காலத்தில் கல்கத்தா பல்கலைக்கழகத்து உபவேந்தர் சேர். அசுரோஸ் மூர்க்கர்ஜீ அவர்கள் தென்னகத்துப் படிப்பாளிகளான சேர். சி. வி. இராமனையும், இராதாகிருஷ்ணனையும் அரசாங்கமறியத் தமக்கு மாற்றிக் கொண்டார்.

இராதாகிருஷ்ணன் தத்துவத்துறையில் மெத்தப் புகுந்து, ஐரோப்பியர் வியக்கும் வண்ணம் இந்தியதத்துவஞானத்தை 1923 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதன்பின் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் தொடர்ப் பேச்சுக்களை நிகழ்த்தினர். அவை அப்ரன்ஹிபேட் விரிவுரைகள் என ஒக்ஸ்போர்ட்டிலும், ஹஸ்கல் விரிவுரைகள் என சிகாகோவிலும் ஒலித்தன. அவர் ஒக்ஸ்போட்டைச் சேர்ந்த மன்செஸ்ரர் பல்கலைக் கழகத்திலும் விரிவுரைகள் ஆற்றியுள்ளார்.

அவர் ஆந்திராப் பல்கலைக் கழகத்தின் முதல் உபவேந்தராயிருந்தபின், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கீழைத்தேச சிட்டாசாரசமய பேராசிரியராய் ஸ்போல்டிங் பீடத்தை அலங்கரித்துவந்தார்.

இந்தியத்தத்துவத்துறையை உலகெங்கும் ஒளிமயமாக்கிய இராதாகிருஷ்ணன் இலட்சியவாதியின் வாழ்வு என்னும் பொருள் பொதிந்த நூல்மூலம் விஞ்ஞானரீதியான சிந்தனைகளையும் எழுதியுள்ளார். இன்றைய உலகில் உயிரற்றன எனக் கருதுமளவில் மலிந்த பிழைகளையும் அவர் சாடியிருக்கிறார். நீதி திறம்பாவகையில் நம்மவர் வாழ்தல் வேண்டும் என்பது அவரின் வேண்டுகோள். புறமதத்தவர்கள் விடுக்கும் கடாவும் வினாக்களுக்குத் தர்க்கரீதியாகப் பதிலளிப்பதில் அவர் தனித்தன்மை வாய்ந்தவர். என்றாலும் அவர் தென்னகத்தவராயிருந்தும் சைவசித்தாந்தத்தை வடக்கில் நன்றாகப் பரப்பவில்லை என்பது அவரிடம் நாம்காணும் குறை.

இராதாகிருஷ்ணன் வெளிநாட்டுத் தூதுவராய் ரஷ்யநாட்டில் பிரகாசித்தவர். பாரதத்தின் உதவி ஜனாதிபதியாயும், ஜனாதிபதியாயும் இருந்தவர். பெரியவர்.

இந்தப் பூமி

இந்தப்பூமி பால்வீதி மண்டலத்திலுள்ள எண்ணிறந்த நட்சத்திரங்களிலொன்றாய சூரியனைச் சுற்றி வருகின்ற ஒரு சிறிய கிரகம் என்பதைப் பழைய தமிழரும் கிரேக்கரும் கண்டனர். கொப்பநிக்கஸ், கெப்லர், கலிலியோ, நியூட்டன், எயின்ஸ்ரன் முதலானோர் இதனை ஆராய்ந்துள்ளனர். இந்த உலகம் எப்படி வந்தது, எங்கே போகிறது என்றெல்லாம் வியாசர், திருவள்ளுவர் முதலானோரும் ஆராய்ந்துள்ளனர்.

★ கீழ்ப்படிவிலை மற்றவர்களைப் பணியவைக்கலாம் ★

கலை

சைவத்தமிழ் வாழ்வில் கலை என்பது கருத்துநிறைந்த ஒருபதம். அது அறிவுத்திறனைக் குறிப்பதாயினும் அதற்கும் அப்பாற்பட்ட ஆற்றலையும் குறிப்பதாகும். வாழ்க்கைக்குப் பயன்படுவனவாய கல்வியாவும் கலை எனப்படும். பரந்த அறிவு, பண்பட்ட உணர்ச்சி, உண்மையான விவேகம் இவற்றின்மீது எழுந்த மனிதப்படைப்பு கலை. சிற்பசாஸ்திரத்தைக் கலை என்று அமரகோசம் கூறும். கல்வியறிவே கலை என்று காமசூத்திரம் கூறும். வேதத்தின்பதினெறு பாகங்களும் கலை என்று இருக்கு வேதம் கூறும். இன்று கலையுலகில் கட்டடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை சிறந்து விளங்குகின்றன.

பாரதநாட்டின் மிகப்பழைய கலைவடிவங்கள் சிந்து வெளியில் எஞ்சிக்கிடக்கின்றன. அக்கலைகளின் காலம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று மேற்கு நாட்டவரே கணித்து வியக்கின்றூர்கள், மொஹஞ்சதரோ, ஹரப்பா நாகரிகக்கலை முதிர்ச்சியடைவதன் முன்னரே உருவான கலையின் காலத்தை என்சொல்வது.

ஒழுங்கான வீடுகள், சீரான பாதைகள் வீதிகள், திறமையான வடிகால் அமைப்புகள், சுகாதார வசதிகள், நகரமத்தியில் நீச்சல் குளம், தண்ணீர் நிரப்பவும் வெளியேற்றவும் வசதிகள், கற்சிலைகள், இலச்சினைகள் சிற்பங்கள், வேலைப்பாடு கொண்ட ஆபரணங்கள், ஆடல் அழகியின் வெங்கலச்சிலை, தாயத்துக்கள், பலவகையான மிருகங்களின் உருவங்கள், மட்பாண்ட வரிசைகள் திராவிட மக்களின் கலைத்திறனைப் பிரதிபலிப்பனவாயுள்ளன.

தேக்கமரத்தின் தரம்

மேற்குநாட்டவரின் "ஓக்" மரத்தால் செய்யப் பெற்ற கப்பல்களிலும் பார்க்க, தேக்கமரத்தால் செய்யப் பெற்ற கப்பல்கள் தரமானவை, தண்ணீரில் நீண்ட காலம் பழுதுபடாமல் பயன்தந்தவை என்று ஆங்கிலேயரே எழுதியுள்ளார்கள்.

தமிழில் வழங்கும் உவமைகள் சில

தமிழில் அழகாகவும், அலங்காரமாகவும், பேசவும், எழுதவும் உவமை அருமையாகப் பயன்தருகிறது. தான் எடுத்துக்கொண்ட பொருள் உவமேயம். இந்த உவமேயத்தை விளக்குவதற்குக் கையாளும் அலங்காரமே உவமை. அவளின் முகம் உவமேயம். சந்திரன் உவமை. அவள் சந்திரன்போன்ற முகமுடையாள். உவமானத்தைக் கையாளும்போது போல, மான, புரைய, நீர போன்ற முதலிய சொற்கள் உதவியாகப் பயன்தருகின்றன.

1. அச்சில்லாத தேர்போல
2. அணைகடந்த வெள்ளம்போல
3. அத்தி பூத்தாற்போல
4. அம்புபட்ட மயில்போல
5. ஆலையில் அகப்பட்ட கரும்புபோல
6. ஆகாயத்திற் கோட்டை கட்டினாற்போல
7. இஞ்சி தின்ற குரங்குபோல
8. இருதலைக்கொள்ளி எறும்புபோல
9. இலவுகாத்த கிளிபோல
10. உடும்புப்பிடி போல
11. எலியும் பூனையும்போல
12. உயிரும் உடலும்போல
13. அடியற்ற மரம்போல
14. பாம்பின்வாய்த் தேரைபோல

இறைவனில் ஒடுங்குவோம்

ஞான ஒடுக்கம் என்பது எல்லா வேலைகளையும் பேச்சுக்களையும், சிந்தனைகளையும் விடுத்து ஒரு மூலையிலிருந்து தியானத்தில் அமைதி காண்பதாகும். தியானம் இறைவனிடத்து ஒடுங்காவிட்டால் அது ஞானவொடுக்கமாகாது.

"நீர் நுமது என்று இவை வேர்முதல் மாய்த்து
இறைசேர்மின்; அதன் நேர் நிறை இல்லை."

"உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து இறை உள்ளில் ஒடுங்கே.

"Let us delight in the Lord in whom the world moves and has its being"

"The fullest possible enjoyment is to be found by reducing our ego to zero."

நாங்கள் எங்களைப் பூச்சியமாக்கி ஒன்று என்றுள்ள இறைவனோடு சேர்ந்தால் ஒன்று பத்தாய், நூறாய், ஆயிரமாய், லட்சமாய், கோடியாய் - அனந்தமாம் ஆவோம். ஏகன் அனேகன் என்றதும் காண்போம்.

"ஒன்றெனப் பலவென அறிவரும்
வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன்
அரன் எனும் இவரை
ஒன்ற நும்மனத்துவைத்து உள்ளி
நும் இருபசை அறுத்து,
நன்றென நன்றென நலம் செய்வது அவனிடை
நம்மூடைநாளே"

★ சிட்டாசாரம் நல்லொழுக்கத்தின் அத்திபாரம் ★

கோயிற்பற்றுகள்

பறங்கியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணம் பழைய தமிழரசர்காலத் துப் பாரம்பரிய முறையில் குடாநாட்டை முப்பத் திரண்டு கோயிற்பற்று களாகப் பிரித்தார்கள். அவை பெரும் பிரிவுகள் தோறும் அமைந்த வகை வருமாறு;

வலிகாமம்

தெல்லிப்பழை, மல்லாகம், மயிலிட்டி, அச்சுவேலி, உடுவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், நல்லூர், வண்ணார்பண்ணை, சுண்டிக்குளி, கோப்பாய், புத்தூர்.

தென்மராட்சி

நாவற்குழி, சாவகச்சேரி, சுச்சாய், வரணி, எழுது மட்டுவாள்.

வடமராட்சி

கட்டைவேலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை.

பச்சிலைப்பள்ளி

புலோப்பளை, முகமாலை, தம்பகாமம், முள்ளிப்பற்று.

தீவுப்பற்று

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, வேலணை, காரை தீவு, புங்குடுதீவு, நயினாதீவு.

இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்தவை: இடங்கள்

1	ஏழுவெந்நீர்க்கிணறுகள்	...	கன்னியா
2	அழகான நீர்வீழ்ச்சி	...	டியலுமா
3	பெரிய நீர்வீழ்ச்சி	...	பம்பரகந்த
4	தாலதா மாளிகை	...	கண்டி
5	பாடும் மீன்கள்	...	மட்டக்களப்பு
6	வெள்ளராசமரம்	...	அநுராதபுரம்
7	கான்சர் வைத்தியசாலை	...	மகாரகம
8	பைத்திய வைத்தியசாலை	...	அங்கொடை
9	பாலிய குற்றவாளிப் பயிற்சி	...	மக்கோனை
10	முத்துக்குளிக்கும் இடங்கள்	...	மன்னார், சிலாபம்
11	பெரிய நீர்த்தேக்கம்	...	கல்லோயா
12	இரத்தினக்கற்கள்	...	இரத்தினபுரி
13	கடற்கோட்டை	...	ஊர்காவற்துறை
14	காகிதநகரம்	...	வாழைச்சேனை
15	கால்நடைப்பண்ணை	...	போபத்தலாவை
16	குகை ஓவியம்	...	டம்புல
17	குதிரைகள்	...	மன்னார், நெடுந்தீவு
18	யானைகள்	...	தங்காலை, டிக்வெல
19	இயற்கைத் துறைமுகம்	...	திருக்கோணமலை
20	சோடா	...	பரந்தன்
21	உருக்கு	...	உருவெல
22	ஓடு	...	அம்பாறை
23	சீனி	...	கந்தளாய்
24	தளபாடம்	...	மொறட்டுவா
25	பெயின்ற்	...	ஜாஎல
26	பால்	...	தமண்கடவை
27	சீமெந்து	...	காங்கேயன்துறை

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை கண்ட தமிழன்

1. தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு.
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்

2. அறிவின் கடலைக் கடைந்தவனும்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்

3. கலைகள் யாவினும் வல்லவனும்
கற்றவர் எவர்க்கும் நல்லவனும்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்றும் உடையோனும்

4. சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கேசொல்!
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்

5. மானம் பெரிதென உயிர்விடுவான்
மற்றவர்க் காகத் துயர்ப்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
தருவது மேல்எனப் பேசிடுவான்

6. உத்தமன் காந்தியின் அருமைகளை
உணர்ந்தவன் தமிழன் பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்
சாந்தந் தவரு துடனிருந்தான்.

சுவாலையின் கோமகன்

அவுணர் இனத்தைச் சேர்ந்த சூரபன்மன் தேவர் களைத் துன்புறுத்தி அவர்களின் இருப்பிடங்களை எல்லாம் எரித்து அழித்துத் தகர்த்துவரும்படி அற்றிலா என்னும் அசுரனை அனுப்பினான். அடக்குமுறைக்கும் அழிவுப் பாதைக்கும் மரணச்சடங்குக்கும் மந்திரியாய அவனுக் குப் பதவியுயர்வு கொடுக்க விரும்பிய சூரன், அவன் விருப்பத்தைக் கேட்டபோது அவன் சொன்னான். "என் னைச் சுவாலையின் கோமகனுக்கிவிடுங்கள்" என்று.

ஆலயம்

இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இறைவன் அடியார்களுக்கு அன்போடு அன்னமளிப்பதும், இறைவன் திருவிழாக்களைக் கண்டு வணங்கி ஆனந்தம் பெறுவதும் பிறவியால் வந்த பெரும் பயன்களாகும்.

''மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணிலாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகெனவுரைப்பார்''.

பிரம்மோற்சவம் என்பது திருக்கோயில்களில் துவஜாரோகணம் என்னும் கொடியேற்று விழாவாகும். அது பெருந்திருவிழாவை ஆரம்பித்து வைப்பதாகும். பிரமோற்சவம் படைப்புக்கிரமத்தைக் குறிப்பதோடு சிவாத்துமா பரமாத்மாவுடன் ஒன்றுபடுந் தத்துவத்தையும் குறிப்பதாகும்.

தேரோட்டத்தை ரதாரோகணம் எனவும் கூறுவர். இரதம் என்னும் தேரேறி நமக்கு அநுக்கிரகம் பண்ணுதல் சம்ஹாரத்தில் அடங்கும். அது துக்கம் போய்ச் சுகம் வருதலாகும். துயர்களையாய் என்று திருமுறைகள் இறைவனிடம் விண்ணப்பித்தல் இக்கருத்திலமைந்ததாகும். சங்கரன் சார்ந்தவர்க்கெல்லாம் நலம்புரிபவர்.

காவேரி

சுங்கையிற் புனிதமான காவிரி என்றும் பொன்னி என்றும் புலவர் புகழ்ந்துபாடும் பெருநதி கேரளம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களின் மருத நிலங்களை வளஞ்செய்கிறது. இந்நதியின் தொண்ணூற் றெட்டு வித நீரும் விளைவைப்பெருக்குகிறது என்றால் விஞ்ஞானப் பொறியியலாளர் பக்கத்துணையாயிருக்கிறார்கள் என்பதே கருத்து.

எண்ணக் குவியல்

(மதிதாசன் – தமிழ்நாடு)

நெறி

இறைவன் ஆணையை இனிதாய் ஏற்று
நிறை மனதோடு நெறியாய் நடந்துசெல்.

செயற்கை

இயற்கையி லிருந்தே மனிதன் தனது
செயற்கை முறையினைக் கண்டுபிடிக்கிறான்.

உண்டு

பூவுக்குப் பின் பிஞ்சும் கனியும்
சாவுக்குப் பின் வாழ்வும் உண்டு.

முத்தர்கள்

தத்துவம் உணர்ந்தோர் சுத்துவ தில்லை
முத்தர்கள் உலகை நத்துவ தில்லை.

முயற்சி

மனிதன் உயர்வது விதியால் அல்ல
இனிய முயற்சியால் இடையறு உழைப்பால்.

சித்தி

அடுத்து அடுத்து முயன்று அலைந்தால்
கிடைத்து விடுமே சித்தி எனும் பொன்.

துன்பத்தில் இன்பம்

துன்பம் நிறைந்த வாழ்க்கை யில்தான்
இன்பப் பூக்களின் இதழ்கள் விரியும்

உயர்த்தும்

உழவும் தொழிலும் உலகை உயர்த்தும்
குழைவும் கனிவும் குணத்தை உணர்த்தும்

ஏர்முனை

பார்முழு தும்பசி போக்கிட வேண்டின்
ஏர்முனை யில்துரு ஏறவி டாதே

விரைந்துசெல்

இனிய கலைகள் இவ்வுல கெந்த
முனையில் காணினும் கற்க விரைந்திடு

கல்வி

கல்வி என்பது வைரக் கல்மலை
கல்லி எடுத்தவன் களிப்பில் நீந்துவான்

உரிமை

துப்பாக் கியின்றவை துலைத்த போதும்
ஒப்புடன் நின்று உரிமையை நாட்டு

தும்மும் போது கவனம்

எல்லோருக்கும் தும்மல் வருகிறது, தும்முங்கள். ஆனால் முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு தும்முங்கள் ஒரு தும்மலின்போது 2000 முதல் 5000 வரை துமிகள் பறக்கின்றன. இவை மற்றவர்களுக்குப் பெருங் கெடுதி செய்வன.

★ உணவைக் குறைத்து உரையைக் குறைத்து உயரலாம் ★



ஈஸ்வரத் தெய்வம்

சிங்கள மன்னர்களும் பொது மக்களும் சிவபெருமானே மெய்யன்போடு வழிபட்டுப் புதுக்கோயில்கள் அமைத்தும் பழைய கோயில்களைப் புதுப்பித்தும் தங்கள் பணியைத் தொடர்ந்து வந்துள்ளார்கள். ஈஸ்வரங்களால் நிறைந்த நாடு இலங்கை என்ற கருத்தில் சிங்களவர்கள் சிவபெருமானே ஈஸ்வரத் தெய்வம் என வழங்கி வந்துள்ளார்கள். மற்றத் தெய்வங்களிற் பார்க்கப் பெரியவர், தலையாயவர், முழுமுதல் என்றெல்லாம் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

சிவபெருமான் கேட்ட வரமருள்பவர் என்று சிங்களவர்கள் சிவவழிபாடு செய்ததுண்டு. மத்திய காலத்துப் பன்மொழிப் புலவர்களான பௌத்த குருமார்கள் சிலர் தாங்கள் செய்த காவியங்கள், பிரபந்தங்களில் சிவனையும், சிவவழிபாட்டையும், சைவக்கிரியைகளின் சிறப்பையும், சங்கு, சேமக்கலம் மிருதங்கம் முதலானவையொலிப்பச் செய்யும் சப்தபூசையின் சிறப்பையும், பஞ்சபுராணம் என வழங்கும் சைவத் திருநெறித் திருமுறையோதும் மேன்மையையும் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பழைய கோட்டே என்னும் ஜயவர்த்தனபுரத்துப் பராக்கிரமபாகு என்பான் தமிழ்ப் பண்பாட்டை நன்கறிந்தவன், முருக உபாசகன். அவனுடைய அரண்மனைச் சிங்களப் புலவராயிருந்த தோட்டகமுவ ராகுலதேரோ அவர்கள் செய்த தூதுப் பிரபந்தத்தில் சைவத்தமிழ் நாகரிகம் கொடிகட்டிப் பறக்கிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பல்லவரும் சோழரும் சைவக்கோயிற் பணி செய்த பாணியில் ஊறிய முதலாம் விஜயபாகு, இரண்டாம் விக்கிரமபாகு என்பார்கள் சிவபக்தியில் சிறந்து விளங்கினர். விஜயபாகு கந்தளாயில் நிறுவிய சிவாலயம் விஜயராசேசுவரம் அவன் புகழ் பேசுகிறது. அவன் வழிவந்த விக்கிரமபாகு சிவப்பணி மேலீட்டினால் தன் பெயர் நின்று நிலவ விக்கிரம கலாமேகேசுவரம் என்னும் சிவாலயத்தைக் கட்டியெழுப்பினன்.

விக்கிரமபாகுவின் வழிவந்த கஜபாகு என்பான் பொலனறுவையில் ஒரு பெரிய சிவாலயத்தை நிறுவியுள்ளான். வரலாற்றாசிரியர்கள் பொலனறுவைச் சிவன் கோயில்கள் பலவற்றை முதலாம் இரண்டாம் என எண்ணிக்கையால் குறிப்பதும் உண்டு. கஜபாகு திருக்கோணேசுவரத் திருக்கோயிலிலும் பல திருப்பணிகள் செய்துள்ளான்.

முதலாம் பராக்கிரமபாகு பெரிய சிவபக்தன். அவன் சிவாலயங்களை அமைத்ததோடும், பழுதுபார்த்ததோடும் அமையாது, கடல் கடந்து சென்று இராமேசுவரத்திலும் பிரமிக்கத்தக்க திருப்பணிகள் செய்துள்ளமை, அத்திருக்கோயில் கருப்பக்கிருகத்திலும் வெளியிலும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பெற்றுள்ளது.

இதிகாச காலத்தில் ஸ்ரீராமர் செய்த இராமேசுவரத் திருப்பணிகளின் பின், வரலாற்றுக்கால மன்னர்கள் பிரபுக்கள் செய்த திருப்பணிகளுள் இலங்கை வேந்தன் பராக்கிரமபாகுவின் திருப்பணியே முதலிற் குறிக்கப் பெற்றுள்ளது.

இப்பால் நிசங்கமல்லன் என்பான் கந்தளாயில் அம்பிகைகோயிலின் பெயரால் சதுர்வேத பிரமபுரமமைத்து அறச்சாலையும் நிறுவியுள்ளான். இன்னும் கலிங்கமாகன் முதலான வேந்தர்கள் செய்த திருப்பணிகளும் பலவாகும்.

தேவாரம்

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

திருநெல் வாயில் அரத்துறை

பண் - பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

எந்தை ஈசனெம் பெருமான்
ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால்
சென்று கை கூடுவதன்மூல்
கந்த மாமல ருந்திக்
கடம்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே

திருச்சிற்றம்பலம்

வனந்தரங்கள் மனிதமுயற்சி

பாலைவனத்தைச் சோலை வனமாக்கும் மனிதரே, சோலைவனத்தைப் பாலைவனமாக்கிறார்கள் என்பது வரலாறு. சகாரா என்னும் பென்னம்பெரிய பாலைவனம், உரோமானியர் ஆபிரிக்காவின் காதேச் நகரை அழிக்கப் போன வழியில் தவிடுபொடியானது. கோபிவனந்தரம் என்பது மொங்கோலியர் மேற்கே நடந்துபோன அதிர்வினால் உருமாறியது. மிதித்தழுல்மடியாத நாகரிகத்தில் வாழ்ந்தவர்களுக்கு இவையாவும் புதுமைதானே.

தலைமைப்பகுதிக்குத் தலை

தலைபிசகானவர்கள் தலைமைப் பதவியை நாடக் கூடாது. தகுதிவாய்ந்த பெரியவர்களே நாட்டையும் மக்களையும் நல்வழிப் படுத்துவார்கள். மரணங்களுக்குப் பொறுப்பானவனே மங்கலகரமான காரியங்களுக்குத் தலைவராகநியமிப்பது மடைத்தனம் தானே!

★ இளமை என்பது மனத்தைப் பொறுத்த பருவநிலை ★

புத்தகப் புதினம்
யார் இந்த வேங்கடரமணி?

தேசபக்தன் கந்தன், முருகன் ஓர் உழவன் முதலான நவீனங்களைத் தேன்சொட்டும் ஆங்கிலத்தில் செவ்விதி னெழுதிய தென்னிந்தியத் தமிழன், ஆங்கிலம் பேசும் அகிலத்துக்கே பெருவிருந்தளித்த பெற்றியர்.

கே. எஸ். வேங்கடரமணி என்பவர் 1927 ஆம் ஆண்டில் (Murugan the Tiller) முருகன் ஓர் உழவன் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். சிலநாளில் அதனைச் சாவித்திரி அம்மாள் அழகுதமிழில் மொழி பெயர்த்து ஆங்கிலந் தெரியாதவர்களின் ஆசையை நிறைவுசெய்தார்.

வேங்கடரமணியின் புகழ் அவனியெலாம் பரவி ஜேமன் தேசத்தவரையும் ஆட்கொண்டது, அண்மைக் காலத்து ஐரோப்பியர் இந்தியா என்றால் இரவீந்திரநாத் தாகூரின் படைப்புக்களையே அறிந்திருந்தனர். ஆனால் வேங்கடரமணியின் ஆங்கிலநடை ஐரோப்பியருக்குத் தத்துவச்சிக்கல்களை உண்டாக்கவில்லை. அவரின் துறை அகிலம் போற்றும் ஆங்கில மொழியின் அன்னமென் னடையாகும்.

எழுச்சிபெற்ற இனியபாரதத்தின் இதயத்துடிப்பை வேங்கடரமணி ஐரோப்பியரிடையே ஒலிக்கவைத்தார். பாரதநாட்டின் பண்பாட்டை, பழக்க வழக்கங்களைப் பாரோர் அறியப் பறைசாற்றினர். ஆற்றங்கரையில் நீராடும் போதும், தெருவீதியில் குழாயில் நீர்கொள்ளும் போதும் சாதாரண குடும்பத்து எழுத்துவாசனையில்லாத பெண்களின் பேச்சில் கலந்தொலிக்கும் வைதிக தர்மங் கள், ஆசார அநுட்டான சீலங்கள் முதலியன பென்னம் பெரிய பல்கலைக்கழகங்களில் உருண்டு புரண்டு வந்தவர் களுக்கும் எட்டாதவையாகும்.

மகாத்மாகாந்தியடிகள் விரும்பிப் போற்றிய கிரா மாந்த வாழ்க்கைமுறைகளை வேங்கடரமணி தமது பாத் திரங்களின் குணசித்திர வகைகளில் இலகுவாகத் துலங்க வைத்திருந்தார். எளிமையில் பெரும்புலமையைக் காட் டிய எழுத்தாளர் வரிசையில் வேங்கடரமணியின் இடம் துலாம்பரமானது.

எழுத்துலகில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒளிவீசிய வேங்கடரமணி 1952 ஆம் ஆண்டில் மறைந் தார். ஆனால் அவரின் ஆங்கில நடையில் மூழ்கியவர்கள் அவரை மறக்கவில்லை. அவரை மறக்கவே முடியாது.

கண்டறியாதன கண்டவர்கள்

பாரதநாட்டவர் பண்டைக்காலத்திற் கண்டு கணித்த காலக்கணிப்பு நுட்பமானது. மணிக்கூடு வருவதன் முன் விநாடி என்னும் திருதியின் ஆயிரத்தில் ஒரு கூறு கண்ட னர், கணித்தனர். கோடிக்கணக்கான ஆண்டுகள் கொண்ட கல்பம் கண்டனர், கணித்தனர். இந்த உலக மும் இதனோடு கூடிய பிற உலகங்களுமாய அண்டமும், பல அண்டங்கள் சேர்ந்த புவனமும் நூற்றுக்கணக்கான இயக் கங்களும் அவர்கள் கண்டனர். பிரபஞ்சம் என்பது உலகின் பெயர். உலகத்தை உண்டாக்கி, அதாவது புவனத்தை உண்டாக்கி, அதன்பின் உயிர்களுக்கு உடம்பைக் கொடுத்து, போகபோக்கியங்களையும் இறைவன் கொடுத் தார். உலகத்துக்குக் கருத்தா கடவுள், அவர் சிவபெரு மான். அவரே எமக்குத் தனுகரணபுவனபோகங்களையும் தந்தருளியவர். எதுவும் தானாக உண்டாகாது. உண் டாக்குவதற்கு ஒருவன் வேண்டும் என்று இன்றைய விஞ் ஞானம் கூறும் உண்மையை எப்பவோ எம்மவர்கண்டு "தருபவன் ஒருவன் வேண்டும்" என்றனர். ஒருவன் என்றது ஒருவனாகிய சிவனை. சிவனே தெய்வம். சிவனை வணங்குபவர் சைவர். சைவசமயம் மிகவும் பழமை யானது என்று மேற்குத் தேயத்து தத்துவ விற்பன்னர் கள் விஞ்ஞான ரீதியாகக் கண்டு கூறுகிறார்கள்.

இரவீந்திரநாத் தாகூர் நினைவு

வங்காளம் தந்த வரகவி, தத்துவநிபுணர், மனிதா பிமானி, சர்வதேசியவாதி, குருதேவர் இரவீந்திர நாத் தாகூர் 1861 ஆம் ஆண்டில் தோன்றி 1941 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். புலமை ததும்பிய குடும்பத்தில் தோன்றிய இவருக்கு இளமையிலேயே பாட்டுவந்த மையை எவரும் அதிசயமாகக் கருதவில்லை. அப்பன் தேவேந்திரநாத் பிரம்மசமாஜத்தின் தூண், வேதவிற் பன்னர். மூத்த அண்ணை பெரிய புரட்சிகரமான தத்துவ விற்பன்னர். இரவீந்திரநாத்தாகூரின் பாரம்பரியம் பெரிது.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தாகூர் அதனைக் காணுமலே மறைந்தார். அவரின் பாடல்கள் சுதந்திர கீதங்களாகப் பறந்தன. பெரும் புலவர் மில்ரன் 18000 அடிகள் பாடினரென்பர். தாகூர் 150,000 அடிகளுக்கு மேல் பாடி நோபல்பரிசையும் லட்சக்கணக்கில் பெற்றார். ஆனால் பிரித்தானியர் வழங்கிய நைற்பட்டத்தை (சேர்) தூக்கி எறிந்தார்.

ஒன்றரை இலட்சத்துக்கு அதிகமான அடிகள் பாடி யவர், மூன்றுலட்சத்துக்கு அதிகமான வரிகளை வசன இலக்கியமாக எழுதித்தள்ளினார். அவரைப்பற்றி அவரின் நண்பன் எட்வேட் தோம்சன் அருமையாக எழுதியுள் ளார்.

தாகூர் தேசியத்துக்கு அப்பால் சர்வதேசியம் கண் டவர். வங்காளத்தை இரண்டாக்கிய வெள்ளையரை அறவே வெறுத்தவர். அதனாலேதான் பிரபுப் பட்டத்தை எறிந்தவர். தாகூரின் பாடல்கள், கதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், வரலாற்றுப் படிவம் எல்லாம் நயம்ததும்புவனவாகும். ஆங்கிலப் புல வர்களான தெனிசன், எலியட் முதலானோர் தாகூர் தங் கள் காலத்தில் வாழ்ந்தாரே என்று பெருமைப்பட்டனர். தாகூரின் காலத்திலேயே வங்காள எழுத்தாளர் பலரிருந் தனர். அவரிகளுள் சுரேந்திரநாத் மஜூம்தார், மதுசூ தன்தத்தா, ஹேம்சந்திர பந்தோ பாத்தியாய, பிகிலால் சக்கரவர்த்தி, சந்திர சவுத்திரி, தேவேந்திரநாத்தாகூர் ஒருசிலராவர்.

கவிஞன்

எந்தக் கவிஞனும் தனக்காகமட்டும் வாழ்க்கை நடத் துவதில்லை. அவனுடைய ஒவ்வோர் உணர்ச்சியிலும் அவன் நாட்டு மக்களும் பங்கு பெறுகின்றனர். — இப்சன்

★ காமம் ஒருவனைப் பிச்சைக்காரனாக்கிவிடும் ★

இடபாரூடர்

சிவபெருமான் அண்டங்களெல்லாவற்றிலும் ஊடுருவி நிறைந்துள்ள இருளை நீக்கும் ஒளிப்பிழம்பு. அவர் ஆதி யாயவர் ஆருமிலாதவன் போது சேர்புனை நீண்முடிப்புண் ணியன் பாதிப்பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்ச் சோதி யுட்சோதியாய் நின்ற சோதியே. அவர் இடபவாகனத் தேறி ஊர்கள் தோறும் சென்று பலியேற்பவர். திக்குகளை ஆடையாக உடையவர். திருநீறு பூசியவர், குறையில்லா தவர். தேவர்களுக்கு குறைபிலாது அருள்புரிபவர். தமக் கென ஒருரில்லாதவர். கறுத்த கண்டத்தினர். அவரை எந்தையே எம்பெருமானே என்று ஏத்தினால் குறைகள் நீங்கிவிடும். அவர் பன்றிக்கொம்பும், எலும்பு மாலையும் தரித்தவர், யானைத் தோலைப் போர்த்தவர், அனலின் நிறத்தவர், படம் கொண்ட பாம்பினை இடுப்பிற் கட்டி யவர், மான் குட்டியைக் கையில் ஏந்தியவர். அவர் ஐயன். அந்தணன், மெய்யன்.

சிவபெருமான் இவ்வுலகமெல்லாவற்றுக்கும் ஒருவன். இருவர் பெரியவரால் அறிய முடியா வண்ணம் நின்ற வர் அவரைத் தலைவரே அருள்வீராக என்று நாம் நாள் தோறும் ஏத்தினால் நம்பாவங்கள் நம்மைவிட்டு நீங்கி விடும். உருத்திராக்கமும் ஆமையோடும் அணிந்த அவரை நாம் வணங்கினால் நற்பேறு அடைவோம்.

கங்கை தங்கிய செஞ்சடை மீது திங்கள் தங்கவைத்த திருவாளன் வானவர் எல்லோரும் வாழ்த்தி வணங்குவர். நல்ல நெஞ்சே நீயும் சிவபெருமானை வணங்கி அருள் பெற்றுய்வாயாக. நமக்குப் புகலடையத்தக்கவராக எழுந் தருளியுள்ளவர் சிவபெருமான் ஒருவரே. சரணம் சரணம் என்று நாம் தஞ்சம் புகுவதற்கு அவரொருவரே தகுதி யானவர். அவர் நல்லவர் வல்லவர் நம்மவர் சிவன் என்னும் பெரியவர். அவர் அடவிகள் தோறும் நடன மாடுபவர்.

சிவபெருமான் ஒருவரே தர்மம், தவம், கருமம் என் னும் படியாய் இருப்பவர். நமச்சிவாய என்று ஏத்துகின்ற அடியார்களின் அச்சத்தை நீக்கியருள்பவரின் திருநாமத் தைப்பற்பல காலம் நாம் பழகிப் பேசி ஏத்துதல் நமது தலையாய கடன். இங்ஙனம் ஏத்துவோமாயின் சூரியனைக் கண்ட பனித்துளிகள் போலப் பாவங்கள் மறைந்துவிடும். எங்கள் இறைவன் இயக்கர், கின்னரர், இந்திரன், தான வர் முதலியோர் வியப்பெய்த நின்றவர். திருமாலும் நான்முகனும் மயக்கமடைய நின்றவர். இறைவன் எமது உள்ளத்தில் எழுந்தருளி எமக்கு அருள்பாலிக்கும் தன்மை யர். அவரை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்குப் பெரு வாய்ப்பாகவுள்ளது இந்தச்சரீரம். "நலங்கொள் சேவடி நாடோறும் வலங்கொண்டேத்துவார் வானுலகாள் வரே."

பழைய பகிடி

(தமிழ்நாட்டு பி. கி. ஜோசப்)

ஓர் இளைஞன் வீதி வழியே ஒரு கழுதையை ஓட்டிக் கொண்டு போனான். அவனை இடைமறித்த பட்டாளத்துக் கூலிப்படைகள், "அடோ! உன் அண்ணனை எங்கே கொண்டு போகிறாய்?" அவர் பட்டாளத்தில் சேராமல் தடுப்பதற்காக வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்.

* * *

ஒருவர் தன்னுடைய நாய் பின்தொடர வீதி வழியே போனார். அவரை வழிமறித்த ஒருவர், "இவ்வழியால் நாயைக் கொண்டுபோக முடியாது." இது என்னுடைய நாய் அல்ல. "அப்படியானால் அது ஏன் உனக்குப் பின் னாலே வருகிறது." "நீயும் தானே எனக்குப் பின்னாலே வருகிறாய்?"

* * *

மனைவசியக்காரன் ஒருவன் ஒரு கூட்டத்தவரிடையே தன்வித்தையைக் காண்பித்தபோது, முன்வரிசையில் இருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி, "பாருங்கள் இப்போது இவருடைய நினைவை எல்லாம் மறக்கச்செய்து விடுகி றேன்." கூட்டத்தில் இருந்த மற்றொருவர் "வேண்டாம்! வேண்டாம்" இவர் எனக்கு நூறுரூபா கடன் தர வேண்டும்."

பறங்கியர் நினைவு

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் 1621 தொடக் கம் 1658 வரை முப்பத்தேழு ஆண்டுகள் அதிகாரஞ் செலுத்திய காலத்தில் செய்த அட்டூழியங்களும் அழிவு களும் அதிகமானாற்போல விட்டுப்போன பழக்கவழக்கள், பரிபாஷைகள், நினைவுகள், சின்னங்களும் பலவாகும். ஒல்லாந்தர் 1658 முதல் 1795 வரை நீண்டகாலம் அதி காரஞ் செலுத்திய போதிலும் அவர்களின் நினைவுள் குறைவானவையேயாகும். ஒல்லாந்தரையும் பறங்கியர் எனவே நம்மவர் வழங்குவது பழக்கமானதால் பறங்கித் தெரு, சீதாரி என்னும் இடப்பெயர்கள் இன்றும் நினை வில் வழக்கில் நிலவுகின்றன. ஒல்லாந்தர் விட்டுச்சென்ற சட்டம், தேசவழமை, வீடமைப்பு, தளபாட அமைப்பு, கோட்டை, சமயக்கோயில் முதலியன இன்றும் நிலவு கின்றன. யாழ்ப்பாணத்தில் எஞ்சி வாழ்ந்த ஒல்லாந் தரும் தம்மொழியை விட்டு ஒருகாலத்தில் போர்த்துக் கேய மொழியையும், பின்னர் ஆங்கிலமொழியையும் பேசினார்கள்.

போர்த்துக்கேயர் சைவசமயத்தவரின் முதல் நூல்க ளான வேதாகமங்களைத் தங்கள் மதநூலுக்கும் இட்டு வழங்கியமை இன்றும் வேதக்காரர், வேதாகம சங்கம் என நிலவுகின்றன.

★ பற்றின்றி வாழ்வதால் அச்சம் அகன்றுவிடும் ★